ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==========================================================================================

## அறிவுரை 35. அண்டினவரிடம் பரிவைக்கொள்.

நம்மைப் புகலாக அடைந்தவரை நாம் பரிவுடன் ரக்ஷிக்க வேண்டும்.

शिबिप्रभृतिகள் (ஶிபி ப்ரப்ருதிகள்) அறுதியிட்டபடியே சரணாகத-ரக்ஷணமே தர்மங்கள் எல்லாவற்றுக்கும் முடிசூடின தர்மம். - அபயப்ரதாநஸாரம்

இதிஹாஸ ஸமுச்சயத்திலிருந்து இரண்டு ச்லோகங்களை மேற்கோள் காட்டிச் சொல்கிறார். புகலடைந்தவரைக் காத்தலே பரமதர்மம் என்பதை. அந்த ச்லோகங்களின் பொருள்களுடன் இந்த வாக்கியத்தின் அர்த்தம்:

அறங்கள் பல உண்டு. அவற்றுள் தலையாயது சரணாகத-ரக்ஷணம் என்பது. அடைக்கலமாக அடைந்தவரைக் காப்பாற்றுவது எல்லா தர்மங்களுக்கும் ராஜா. இது குறித்து சிபிசக்ரவர்த்தி சொன்னது: பக்ஷியே! பயபீதியுடன் நம்மை அடைந்த பிராணிகளுக்கு அபயம் அளிப்பது என்கிற தர்மத்தைக் காட்டிலும் பெரியதொரு தர்மம் கிடையாது.

இது மஹாதர்மம். சரணடைந்தவனைக் காப்பாற்றுவதால் அக்ஷயபலன் ஏற்படும். தர்மநிச்சயதத்துவம் அறிந்த பண்டிதர்கள் இப்படிச் சொல்கிறார்கள். அடைக்கலமாக அடைந்தவரை உதாஸீனப்படுத்தக் கூடாது. காட்டிக்கொடுக்கக் கூடாது. வேறொரு தர்மத்தைச் சாக்கிட்டு விட்டுக்கொடுக்கக் கூடாது. பரிவுடன் காக்கவேண்டும்.

*****************